OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 04 வெள்ளிக்கிழமை (19 – 11 – 1993) UTHAAYN A Lively National Tamil Daily கதிர் 356

# வடக்கு - கிழக்கு பிரச்சினையை தீர்க்க அரசுக்கு திராணியில்லை

## அதனாலேயே யுத்தம் நீடிக்கிறது என்று கண்டிக்கிறார் சிறிமாவோ

கொழும்பு, நவம்பர் 19

வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் விரும்பவில்லை. அதற்கான திராணியும் அதனிடம் இல்லை. அதனாலேயே வடக்கு - கிழக்கு யுத்த நிலை நீடித்துக் கொண்டே போகிறது.

யுத்தம் முடிவில்லாமல் நீடிப்பதால் ஆயிரக்கணக்கான படைவீரரும் மக்களும் மடிந்தொழிகின்றனர்.

இவ்வாறு வரவு—செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு நேற்றுப் பேசிய எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தைக் கண்டித்தார்.

வடக்கு — கிழக்குப் பிரச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மதுரங்குளத்திலிருந்து படையினர் வெளியேறினர்

யாழ்ப்பாணம், நவ. 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுரங்குளத்தில் நிலை கொண்டிருந்த படையினர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

முகாமில் இருந்த சகல இராணுவத் தளபாடங்களையும் எடுத்துக்கொண்டு கடந்த செவ்வாயன்று இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

வெல்லாவெளி, பாலையடி வெட்டை, வக்கிஎல்லை ஆகிய இடங்களில் உள்ள முகாம்களில் இருந்தும் படையினர் வெளியேறிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் அவர்கள் வெளியேறியதை அடுத்து விசேட அதிரடிப் படையினர் அந்த முகாம்களில் நிலைகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

### முச்சந்தி முரளி



அம்மா என்ன நேரத்துக்கு நேரம் ஒன்று பேசுகிறா?

# மாவீரர் வாரத்தைச் சிறப்புடன் கொண்டாட மக்கள் ஏற்பாடு

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இம் மாதம் 27 ஆம் திகதி வரை மாவீரர் வாரம் தமிழீழப் பகுதி எங்கும் மிக எழுச்சியுடன் கொண்டாடப்படும்.

ஈழத் தமிழ் மக்களின் சுதந்திரத்துக்காக, அவர்களின் விடிவுக்காக தமது இன்னுயிர் ஈந்த மாவீரர்களை நினைவு கூர்ந்து, அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகளை மக்கள் ஆர்வத்துடன் செய்து வருகின்றனர்.

மாவீரர் வாரத்தைச் சிறப்புடன் கொண்டாட வேண்டும் என்ற அக்கறையுடன் வீதிகள், சந்திகள், மற்றும் பிரதான இடங்களில் மாவீரர்களின் வரலாறுகளைச் சித்திரிக்கும் அலங்கார வளைவுகளை மக்கள் அமைத்து வருகின்றனர். பொது நிறுவனங்களும் மற்றும் சமூக அமைப்புகளும் மாவீரர் ஞாபகமாக அலங்கார வளைவுகளை அமைத்து வருகின்றன.

யாழ். குடா நாட்டின் வீதிகள், பொது இடங்களில் மாவீரர் வாரத்தை ஒட்டிய பாதாகைகளும் கட்டப்பட்டு வருகின்றன. மஞ்சள் – சிவப்புக் கொடிகள் கண்ணைக் கவரும் விதத்தில் எல்லா இடங்களிலும் அலங்காரம் காட்டுகின்றன.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அடிக்கடி சுற்றி வளைப்பு: அம்பாறைப் பகுதியில் தமிழ் இளைஞர்கள் கைது

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்க் கிராமங்கள் படையினரால் அடிக்கடி சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்படுகின்றன.

அங்குள்ள தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.


திருக்கோவில், ஆலையடி வேம்பு, காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு ஆகிய கிராமங்களே படையினரின் தேடுதல் நடவடிக்கைக்கு உள்ளாகியுள்ளன. (த-எ)

## படையினரை சோதனையிட ரத்மலானையில் தனிப்பிரிவு

வடக்கு - கிழக்கு முகாம்களில் இருந்து விமான மூலம் இரத்மலானை விமான நிலையத்துக்குச் செல்லும் படையினரை சோதனையிட தனிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு முகாம்களில் இருந்து அரச அலுவலாகவும், சொந்தலீவிலும் செல்லும் படை அதிகாரிகள் உட்பட படையினர் இதுவரை காலமும் சோதனையிடப்படவில்லை என்றும் —

படையினர் லீவில் செல்லும் போது ஆயுதங்களுடன் செல்லலாம் என்ற சந்தேகத்தில் அவர்களது உடைமைகளைச் சோதனையிட தனிப்பிரிவு அமைக்கப்பட்டிருப்பதாகவும் —கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (இ-3)



## 187 படையினரின் அஸ்தி வவுனியாவில் ஒப்படைப்பு

பூநகரி முகாம் தகர்ப்பின் போது கொல்லப்பட்ட படையினரில் 187 பேரின் அஸ்தி அடங்கிய கலசங்கள் நேற்று வவுனியாவில் இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் வைத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரியிடம் அஸ்திக் கலசங்களைக் கையளித்திருந்தனர்.

187 சிப்பாய்களின் அஸ்திகள் கொண்ட 187 சிறிய பிளாஸ்டிக் கலன்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் இராணுவத்திடம் நேற்று ஒப்படைக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலியும் தெரிவித்தது.

ஐந்து பிளாஸ்டிக் கலன்களில் அவற்றில் உள்ள அஸ்திக்குரிய படையினரின் பெயர்களும் இலக்கமும் குறிப்பிடப்பட்டிருந்தன.

மேலும் 40 பிளாஸ்டிக் கலன்களில் கைவிரல் அடையாளங்கள் மட்டுமே காணப்பட்டன.

எனினும் எஞ்சிய 142 பிளாஸ்டிக் கலன்களில் எத்தகைய அடையாள விவரங்களும் காணப்படவில்லை என்றும் அப் பேச்சாளர் தெரிவித்தார், (ஒ-எ-3-6)

## மன்னம்பிட்டியில் 4 தமிழர்கள் கடத்தப்பட்டுப் படுகொலை!

யாழ்ப்பாணம், நவ. 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் மன்னம்பிட்டிப் பகுதியில் உள்ள கரபாளை என்னும் இடத்தைச் சேர்ந்த தமிழர்கள் நால்வர் இராணுவத்தினராலும், சிங்களக் காடையரினாலும் கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாயன்று இரவு 7.30 மணியளவில் படையினருடன், சிங்களக் காடையர்களும் இணைந்து அப்பகுதியைச் சுற்றிவளைத்தனர் என்றும் —

அச்சமயம் மேற்படி நான்கு தமிழ்ப் பொது மக்களும் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட நால்வரும் திருமணமானவர்கள் என்றும் அவர்களில் ஒருவர் பெண் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கணபதிப்பிள்ளை சிவகுமார் (வயது 29), நமசிவாயம் (வயது 49), குழந்தைவேல் ராணி (வயது 33), பூபாலபிள்ளை குழந்தைவேல் (வயது 35) ஆகியோரே கொலை செய்யப்பட்டவர்களாவர். (இ-5)

## மாதகல் படையினர் நேற்று ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், நவ. 19

மாதகலில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று முற்பகல் 10-30 மணிமுதல் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களை நடத்தினர். சில்லாலை மற்றும் அதனை அண்டிய இடங்களில் படையினர் ஏவிய ஷெல்கள் விழுந்து வெடித்தன.

கடற் பிராந்தியத்தில் இருந்தும் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் மக்கள் பதற்றமடைந்தனர்.

இதேசமயம் பலாலி இராணுவ முகாமில் இருந்தும் நேற்று அதிகாலை 2-30 மணிக்குச் சுற்றுப்புறக்குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனிடையே மண்டைதீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு 11-30 மணியளவில் கடற்படையினரின் படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. மண்டைதீவில் உள்ள படையினர் கரையோரப் பகுதிகளை நோக்கி கலிபர் துப்பாக்கித் தாக்குதலையும் நடத்தினர். (ஒ-13-5-16)

## ஆண்டு இறுதித் தேர்வு இன்று ஆரம்பமாகாது

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ். கல்வி அலுவலகத்தால் நடத்தப்படவிருந்த ஆண்டு இறுதித் தேர்வு இன்று ஆரம்பிக்கப்படமாட்டாது.

நேற்று யாழ். கல்வி அலுவலகத்தில் நடந்த கோட்ட அதிகாரிகளுக்கான கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. துரை தியாகராஜா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் ஆண்டு இறுதித் தேர்வு நடத்தும் சாத்தியப்பாடு குறித்து ஆராயப்பட்டது.

நேற்று எடுக்கப்பட்ட முடிவின்படி —

ஆண்டு 4, 5, 6, 7 தேர்வுகள் எதிர்வரும் 29 ஆம் 30 ஆம் திகதிகளிலும், டிசம்பர் 1 ஆம் 2 ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

ஆண்டு 8, 9, 10 வகுப்புகளுக்கான தேர்வுகள் அடுத்த மாதம் 16 ஆம் 17 ஆம் 18 ஆம் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் நடைபெறும்.

முன்னர் அறிவிக்கப்பட்ட நேர சூசிகளின் படி தேர்வு நடைபெறும்.

ஆண்டு இறுதித் தேர்வுகள் இன்று ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (இ-3-5)

## ஆண்டு 6 அனுமதிக்கு புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், நவ. 19

ஆண்டு 6 வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு புதிய முறையை யாழ். கல்வி அலுவலகம் அமுல் செய்யவிருக்கிறது.

யாழ். கல்வி அலுவலகத்தால் எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் நடத்தப்படும் பொதுக் கல்வித் தேர்வில் பெறும் புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும்—

ஆண்டு 5 இல் தோற்றும் மாணவர்களின் விடைத்தாள்களை கோட்டக் கல்வி அதிகாரிகள் பொறுப்பேற்று விசேட குழு மூலம் திருத்தி மதிப்பெண் வழங்கப்படும் என்றும் — கல்வி அலுவலக அதிகாரிதெரிவித்தார்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி அழிவுகள் குறித்து ரணில் சபையில் அறிவிப்பார்

கொழும்பு, நவ. 19

பூநகரி இராணுவ — கடற்படைக் கூட்டுத்தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தது தொடர்பான சகல விவரங்களையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விரைவில் — இன்னொரு தினத்தில் — நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

அமைச்சர் விமல் விக்கிரமசிங்கா இத்தகவலை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். (ஒ-எ)

## ம. எண்ணெயுடன் 'கோமாரி' இன்று இங்கு வந்து சேரும்

### 600 தபால் பொதிகளும் வருகின்றன

யாழ்ப்பாணம், நவ. 19

மூவாயிரத்து 500பரல் மண்எண்ணெயுடன் 'கோமாரி' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரி நேற்று மாலை தெரிவித்தார்.

இக்கப்பலில் தேங்காய் எண்ணெயும், தார் பரல்களும் மற்றும் 600 தபால் பொதிகளும் எடுத்துவரப்படுகின்றன.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் இன்றே ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-5)

### பி.பி.ஸிக்கு தமிழ் எம். பி. பேட்டி

## கிழக்கில் கூட்டுறவு தேர்தல் நடத்த முடியாத நிலை

### உள்ளூராட்சித் தேர்தல் எப்படிச்சாத்தியம்?

கொழும்பு, நவ. 19

மட்டக்களப்பில் கூட்டுறவுச் சபைகளுக்கான தேர்தலைக் கூட நடத்த முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே எவ்வாறு உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியும்?

யாழ்ப்பாண மாவட்ட எம். பி. திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டுறவுச் சபைகளுக்கான தேர்லை நடத்த உகந்த சூழ்நிலை அங்கு இல்லை எனக் கூறி கூட்டுறவு ஆணையாளர் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் கடந்த இரண்டு நாட்களாக நடந்து வருகிறது.

மட்டக்களப்பில் உகந்த சூழ்நிலை இல்லை. எனவே அங்கு தேர்தல் வைக்க முடியாது என மட்டக்களப்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் அறிவிப்பு கண்டனங்களை திசை திருப்பும் தந்திரம்!

### பி. பி. ஸி. கண்ணோட்டம்

கொழும்பு, நவ. 19

கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தப் போவதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருப்பது கண்டனங்களைத் திசைதிருப்பும் ஒரு தந்திரம் ஆகும்.

மேற்கண்டவாறு பி.பி.ஸி. தெரிவித்தது.

உள்ளூராட்சித் தேர்தல் ... அடிநிலைத் தேர்தல்கள் ஆகும்; அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல.

எனினும் - அவற்றை நடத்தப்போகின்றோம் என்று அடிக்கடி அரசு கூறிவருவதற்குக் காரணம், வடக்கும்-கிழக்கும் தனது கட்டுப்பாட்டில் இருப்பதுபோல காட்டிக் கொள்ள விரும்புவதே ஆகும்

( 3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இருபாலை பெரியகுளத் தடியில் பாதை, கிணற்றுடன் (வீடுகட்ட அல்லது தோட்டம் செய்ய உகந்தது) பதினொரு பரப்பு நிலமும் அத்துடன் சேர்ந்த ஒன்பது பரப்பு நெல்வயலும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: சதாசிவம் பரமானந்தம், ''இந்து இல்லம்'', இருபாலை றோட், கோப்பாய் தெற்கு. (28095)

### தேவை

பற்பொடி, நீலம், சீயாக்காய்ப் பவுடர் ஒட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. எமது தயாரிப்புக்களை சைக்கிளில் வியாபாரம் செய்யக்கூடிய ஆண்கள் தேவை. ஜெயலட்சுமி இன்டஸ்ரீஸ், பாடசாலை வீதி, ஆறுகால் மடம். (28091)

### இறைச்சிக் கோழி தேவை

இறைச்சிக்கான கோழிகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (6511)

### கால்நடை மருந்துகள்

கால்நடை மருந்துகள் விற்பனைக்குண்டு. மேற்படி மருந்து வகைகள் தேவைப்படுவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்: யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு. (சி-6370)

### வகுப்புக்கள்

வகுப்புக்கள் வழமைபோல் எதிர்வரும் 20 – 11 – 1993 சனிக்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளன. நிர்வாகி, Yogi Home Science Academy, 71, Nayanmar Veethy, Kachcheri Nallur Road, Nallur, Jaffna. (28076)

## முதலாம் வருட நினைவஞ்சலி



### திருமதி நடராசா மகேஸ்வரி

(உரிமையாளர்: சுதர்சினி ரெக்ஸ், கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்)

மலர்வு: 27 — 05 — 1931

உதிர்வு: 31 — 10 — 1992

திதி: 19 - 11 - 1993

பாசமுடன் எம்மை பாங்குடனே வளர்த்து,
பண்புமிகு தழைத்தோங்க காத்தீரே அம்மா
ஏற்றமொடு நாமினிது வாழ இப்புவியில் வித்திட்டு
மின்னலென மறைந்தாயே நாமிங்கு கதறியழ அம்மா
நினையாத நேரம் அணையாத ஒளிவிளக்கே அம்மா
நேற்றுவரை எங்கள் உயிரோடு குடியிருந்து
காணும் இடமெல்லாம் உன் கருணைமுகம் காட்டிய- எம் தாயே
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ அம்மா
எம் இதயம் மீண்டும் வரும் நினைவலையால்- உருகி அழும்

எம் உள்ளம் எந்நாளும் உங்களையே எண்ணித் தவிக்குதம்மா! இரும்பாக்கிஎம் மனதை இறுக்க நினைத்தாலும் கரும்பான உன் நினைவுகளே கண்முன்னே நிழலாட விழிநீரை உன் நினைவுக்காய் நாம் உதிர்ப்போம் எந்நாளும்-அம்மா! எம் அண்டவயல் பிள்ளையார் அருள் வேண்டித் தாள் பணிவோம்.

மகள், மகன்மார்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

ந. தில்லைநாதன்,
தங்கோடை,
காரைநகர். (28069)

## தரமான உப்பு கிடைக்கவில்லை என்று கவலையா? கவலையை விடுங்கள்!

வெண்மையான தரமான உப்பினை
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

* மொத்த விலை **7-50** சதம்
* சில்லறை விலை **8-00** ரூபா

தரமான உப்பினை பெற்றுக் கொள்ள நீங்கள் தவறாது நாடவேண்டிய இடம்:

★ தாயகம் பல்பொருள் அங்காடி, யாழ்ப்பாணம்.
★ உதயம் பல்பொருள் அங்காடி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
★ தாயகம் பல்பொருள் அங்காடி, கொக்குவில்.
★ தாயகம் பல்பொருள் அங்காடி, சுன்னாகம்.

குறிப்பு:

உப்பு தேவைப்படும் வியாபாரிகள் மேற்படி நிலையங்களுடன் தொடர்பு கொண்டால் உங்கள் வர்த்தக நிலைய வாசலில் கொண்டு வந்து தர ஒழுங்குகள் செய்யப்படும்.

[சி-6372]

## வினைவர வெட்டி வீழ்த்த வீறு கொண்டு வருகின்றாள்
## வண்ணைக் கவிஞனின்
# தீர்க்கா

(இந்து, கலை, இலக்கிய, மாத சஞ்சிகை)

ஆம் — எதிர் வரும் (28 — 11 — 1993) ஞாயிறு திருக்கார்த்திகைத் தீப நன்னாளில்

## மங்களகரமான வெளியீட்டு விழா

(அன்பழைப்பாணை)

நிகழ்விடம்; அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றிலில் (ஏரலாற்றுப் பெருமைமிகு சுதுமலை அம்மன்)

தலைமை: கம்பவாருதி இ. ஜெயராஜ் அவர்கள்

இப்புனிதமிகு வைபவத்தில்

★ சிறப்புச் சொற்பொழிவுகள் ★ அபிநய நடனம் ★ கவியரங்கம்
★ இசையரங்கம் ★ இயல், இசை, நாடகம்

(ஏலவே வழங்கிய அழைப்பாணையை ஏற்று எதிர்வரும் 28ஆம் திகதி விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.)

பிரதம ஆசிரியர்,
''துர்க்கா''

''கந்தன் அருள்'',
பட்டின சபை வீதி, மாளிப்பாய்.

[28096]

# பதவி வெற்றிடம்

சூழல் பாதுகாப்பில்-
ஆர்வம் உள்ளவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம்!
இதோ
சூழல் பாதுகாப்பினைப் பேணுவதற்கு ஒரு நிறுவனம்!!
வாருங்கள்
நீங்களும் இணைந்து கொள்ளலாம்!
சேர்ந்து பணியாற்றலாம்!

சூழல் பாதுகாப்புத் தொடர்பாக ஆரம்பிக்கப்படவுள்ள நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கான வேலை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 25-11-1993

## 01. பொது முகாமையாளர்

தகைமைகள்

கல்வித் தகைமைகள்:

தாவரவியல்/விவசாய பட்டதாரி

அல்லது

விவசாயம் சார்ந்த அரச/தனியார் நிறுவனம் ஒன்றினை 05 தொடக்கம் 10 வருடங்கள் நிர்வகித்த அனுபவம்

★ வயதெல்லை: **25 — 50** வரை
★ குறிப்பு: 1. வனவளத்துறையில் கடமையாற்றிய அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்
2. கல்வித் தகைமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதியும் வழங்கப்படும்.

## 02. கணக்காளர்

தகைமைகள்:

கல்வித் தகைமைகள்:

அங்கீகரிக்கப்பட்ட ஒரு கணக்குத் துறைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

அரச / தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்காளராக 05 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய அனுபவம்

★ வயதெல்லை: **25 — 50** வரை
★ குறிப்பு: கல்வித் தகைமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும்.

## 03. காசாளர்

தகைமைகள்:

கல்வித் தகைமைகள்:

க. பொ. த. (உயர்தரம்) 04 பாடங்கள் சித்தி

அல்லது

அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் 10வருடத்திற்கு குறையாது காசாளராக கடமையாற்றிய அனுபவம்

★ வயதெல்லை: **22 — 50** வரை
★ குறிப்பு: கல்வித் தகைமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும்

## 04. கணக்கு எழுதுவினைஞர்

தகைமைகள்:

கல்வித் தகைமைகள்:

க. பொ. த. (உயர்தரம்) 04 பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் கணக்கியல் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்கு எழுதுவினைஞர் ஆக 05 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய அனுபவம்

★ வயதெல்லை: **20 — 50** வரை
★ குறிப்பு: கல்வித் தகைமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும்.

## 05. வன உத்தியோகத்தர்

தகைமைகள்:

வன இலாகாவில் வன உத்தியோகத்தராக 10 வருடங்களுக்கு குறையாது கடமையாற்றிய அனுபவம்.

அல்லது

அரச / தனியார் பெருந்தோட்டங்களில் வனம்வளர்ப்பது தொடர்பான பகுதியில் உத்தியோகத்தராக 05 வருடங்களுக்கு மேல் கடமை ஆற்றிய அனுபவம்.

★ வயதெல்லை: **30 — 50** வரை
★ குறிப்பு: சவுக்கு நடுகையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கல்வித் தகைமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும்.

## 06. தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்

தகைமைகள்:

அரச / தனியார் பெருந்தோட்டங்களில் தென்னை வள உத்தியோகத்தராக 10—15 வருடங்கள் சேவையாற்றிய அனுபவங்கள்

அல்லது

அரச / தனியார் தென்னந்தோட்டம் ஒன்றினை 10—15 வருடங்கள் நிர்வகித்த அனுபவம்

★ வயதெல்லை: **30 — 50** வரை
★ குறிப்பு: கல்வித் தகைமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும்.

## 07. தொழிலாளர்கள்

தகைமை:

## வீர அஞ்சலிகள்

பூநகரிச் சமரில் வீரகாவியம் படைத்த
மெமோறியல் அன்னையின்
வீர வித்துக்களான

**2ஆம் லெப். வெகுந்தன்**
தம்பித்துரை மோகனதாஸ்
(புதுமடம், மானிப்பாய்)

**வீரவேங்கை இன்பன்**
தம்பிராஜா மங்களேஸ்வரன்
(உச்சியோடை, மானிப்பாய்)

ஆகியோருக்கு எமது உணர்வு பூர்வமான அஞ்சலிகள்.

உயர்தர மாணவர் மன்றம்.

மெமோறியல் கல்லூரி,
மானிப்பாய். [28097]

## ஈராண்டு சென்றாலும் எம்மிதயமலர் விட்டகலாத

தோற்றம்: 26 — 10 — 1965



மறைவு: 12 — 11 — 1991

### திருமதி வன்மிகலிங்கம் விஜிதா

திதி: 19 - 11 - 1993

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அப்பா, அம்மா, சகோதரிகள்,
சகோதரன், கணவன்.

வே. சுப்பிரமணியம்,
ஏழாலை கிழக்கு. (6724)

## 45 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருநெல்லையினார் ஆறுமுகம்

உபாத்தியாயர்
(புங்குடுதீவு)

புங்குடுதீவெனும் பொன் மலிபூமியில்
மங்காப்புகழ்தரு மரபினிலுதித்தவன்
சிங்கப்பூரினும் மலாய் நாட்டினும்
சீர்பெறு முத்தமிழ் சிறப்புடன் வளர்த்தவன்
பைந்தமிழ்ப் புலவன் பாரதி குடும்பம்
தீந்தமிழ்த் தென்றல் திரு வி.க.வின் சிறந்த நண்பன்
இன்றுடன் மறைந்து
நாற்பத்தைந்து ஆண்டுகள் கடந்தவ
நின்முகமாறுமுகமாய் மலர்ந்திட
எம்மருள்த் தந்தையே எம்மிதய அஞ்சலி!
மறைந்த நின் மனைவி வள்ளியம்மை
புதல்விகள் திருமதிகள் ஆசிரியை யோகாம்பிகை,
கமலாம்பிகை, சாரதாம்பிகை சார்பில்

- மகன் குடும்பம்.

மருதனார்மடம். [6722]

சவுக்கு, தென்னை மரங்களிலிருந்து விதை சேகரிப்பு மற்றும் நாற்று மேடை போடல், கன்று நடுகை போன்ற வேலைகளில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ சம்பளம்: பேசித் தீர்க்கப்படும்.
அனுபவத்திற்கு ஏற்ற தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
விளம்பர இல. 570.
**C/O உதயன்,**
யாழ்ப்பாணம்.

[சி-6373]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தேர்தல் அறிவிப்பு

கிழக்கு மாகாணத்திலும், வவுனியா மாவட்டத்திலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தப் போவதாக அரசாங்கம் மீண்டும் ஒரு முறை அறிவித்திருக்கிறது.

கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான அறிவிப்புக்களை அரசாங்கம் முன்னரும் வெளியிட்டிருந்தது. நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான திகதிகளும் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. ஆனால் அறிவிப்பு வந்த ஒரு சில நாட்களிலேயே ஒத்திவைப்பும் அறிவிக்கப்பட்டது.

அப்போது, தேர்தலை நடத்தக் கூடிய சாதகமான நிலை பூரணமாக உருவாகவில்லை என்று கருதி, அத்தகைய நிலையை உண்டாக்குவதற்குப் படையினருக்கு அவகாசம் வழங்கப்பட்டது.

இடைப்பட்ட காலத்தில் இரண்டொரு சிறிய அளவிலான இராணுவ நடவடிக்கைகளை நிகழ்த்தியதால் நிலைமை திருந்தி விட்டதாகப் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் திருப்தி அடைந்திருக்கிறார்கள். அந்தத் திருப்தியின் அடிப்படையில் தேர்தலை நடத்தக்கூடிய சாதகமான சூழ்நிலை உருவாகிவிட்டதாக அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள்.

கிழக்கிலும் சரி, வவுனியாவிலும் சரி — இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் — மக்கள் பாதுகாப்புடன் தமது வாழ்க்கையை நிம்மதியாக நடத்தக் கூடியதாக இயல்பு நிலை உருவாகவில்லை என்பதே உண்மை. அகதிகளாக இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் உரிய முறையில் மீளக் குடியமர்த்தப்படவில்லை. அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. கிழக்கில் உருப்படியாக நடந்த ஓர் அலுவல் என்றால் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமே!

இந்த லட்சணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் எந்த ஆண்டின் தேர்தல் இடாப்பின் அடிப்படையில் நடக்கப் போகிறது என்பது குறித்துப் பகிரங்கமான அறிவித்தல் எதுவுமே இல்லை.

ஆகையால், கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் என்பது அங்கு வழமை நிலை திரும்பி விட்டது; அங்கு அரசின் ஆட்சி நிர்வாகம் சரியாக நடக்கிறது; சனநாயகத்தைப் பேணுவதில் அரசு அக்கறையாக உள்ளது என்று வெளி உலகத்துக்குக் காட்டும் கண் துடைப்பு ஏற்பாடே. பொதுத் தேர்தலில், ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகளைச் சேகரிப்பதற்கான ஏமாற்று வேலையே.

கிழக்கில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அடக்கி விட்டதாக கூறிக் கொள்ளவும் இந்தத் தேர்தல் உதவும். தமது வசதிக்கும் வாய்ப்புக்கும் உகந்தாற் போல கிழக்கில் இருண்ட தேர்தல் ஒன்றை நடத்தி விட்டு, இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது, தமிழர்களின் ஜனநாயக உரிமைகள் செவ்வனே பேணப்படுகின்றன என்று அரசாங்கம் பீற்றிக் கொண்டாலும், பிரசாரம் செய்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை!

பூநகரித் தோல்வியினால் தெற்கில் ஏற்பட்ட நெருக்கடியைத் தணிப்பதற்காகவும், சிங்கள மக்களைத் திசைதிருப்புவதற்காகவும் கூட முன்னர் ஒத்திவைக்கப்பட்ட தேர்தல் அறிவிப்பு மீண்டும் ஒலிக்கலாம் அல்லவா?

சர்வ வல்லமையும் படைத்த ஜனாதிபதியும், அவரது அரசாங்கத்தினரும் தமிழ்ப் பகுதிகளில் தமிழர்களின் விருப்பம், இணக்கம் இன்றி எதனையும், எப்படியும் தாம் நினைத்தபடி செய்யலாம் என்ற நிலையையே இது காட்டுகிறது. தமிழ் மக்கள் இந்தத் தேர்தலைப் பூரணமாகப் பகிஷ்கரித்துத் தமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும்.

# மீட்புநிதிக் கடன் மீளளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 19

தமிழீழ மீட்பு நிதிக்கடன் செலுத்தியவர்களில் ஆயிரத்து இருநூறு பேருக்கு அக்கடன் மீளளிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

மீட்பு நிதி செலுத்தியோரில் மாதம் நூறு பேருக்கு கடன் மீளளிப்புச் செய்யப்படும் என விடுதலைப் புலிகள் முன்னர் அறிவித்திருந்தனர்.

அத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு டிசம்பர் முதல் இவ்வாண்டு நவம்பர் வரையான 12 மாத காலத்தில் மீட்பு நிதிக் கடன் மீளளிப்புப் பெறுவோரின் மீட்பு நிதிக் கடன் பத்திர இலக்கங்கள் பிரிவு ரீதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பிரிவினர் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி மீளளிப்புப் பெறும் கடன் பத்திரங்களின் விவரம் வருமாறு:

### சாவகச்சேரி

யா / சா 463

| | | | |
|---|---|---|---|
| 645 | 774 | 1265 | 1458 |
| 3400 | 3735 | 3745 | 4116 |
| 5122 | 5426 | 6467 | 6626 |
| 102 | 244 | 1483 | 1826 |
| 1932 | 2441 | 3176 | 4436 |
| 4537 | 4575 | 5354 | 6457 |
| 6708 | 28 | 160 | 565 |
| 666 | 715 | 1507 | 1651 |
| 3118 | 3272 | 3458 | 5746 |
| 6151 | 6368 | 324 | 480 |
| 673 | 1064 | 1449 | 1606 |
| 2346 | 2852 | 3001 | 4045 |
| 4352 | 6120 | 6752 | 18 |
| 236 | 667 | 860 | 1765 |
| 2336 | 2638 | 2873 | 2947 |
| 4148 | 4230 | 5677 | 6494 |
| 35 | 78 | 190 | 227 |
| 430 | 633 | 1492 | 2628 |
| 3544 | 3869 | 3965 | 6455 |
| 6649 | 57 | 610 | 1240 |
| 1690 | 2015 | 2651 | 3265 |
| 4036 | 4529 | 6298 | 6404 |
| 6538 | 6604 | 46 | 443 |
| 953 | 1074 | 1223 | 2977 |
| 3350 | 3661 | 4308 | 5136 |
| 5623 | 5661 | 6523 | 336 |
| 661 | 664 | 1658 | 1943 |
| 2445 | 2833 | 2878 | 4969 |
| 6105 | 6123 | 6623 | 6872 |
| 93 | 323 | 364 | 450 |
| 525 | 593 | 649 | 1104 |
| 2372 | 5775 | 6233 | 6488 |
| 6602 | 154 | 217 | 536 |
| 672 | 950 | 1282 | 1375 |
| 2133 | 2136 | 3813 | 4133 |
| 4697 | 6552 | 58 | 134 |
| 156 | 309 | 635 | 1162 |
| 3366 | 3969 | 4409 | 4435 |
| 4610 | 4896 | 7037 | |

### பச்சிலைப்பள்ளி

கி / ப / 362

| | | | |
|---|---|---|---|
| 596 | 464 | 148 | 503 |
| 499 | 335 | 263 | 24 |
| 95 | 198 | 534. | |

### வடமராட்சி கிழக்கு

யா / வ. கி / 156

| | | | |
|---|---|---|---|
| 202 | 306 | 512 | 466 |
| 571 | 392 | 871 | 430 |
| 695 | 149 | 378 | 09 |
| 383 | 511 | 627 | 48 |
| 663 | 107 | 842 | 186 |
| 822 | 77 | 485 | |

### சங்கானை

யா / ச / 122

| | | | |
|---|---|---|---|
| 259 | 497 | 855 | 981 |
| 1330 | 2354 | 3608 | 4033 |
| 673 | 874 | 889 | 1342 |
| 2340 | 2831 | 3161 | 3217 |
| 4092 | 129 | 132 | 773 |
| 1163 | 2068 | 2338 | 2535 |
| 2607 | 4571 | 237 | 299 |
| 429 | 478 | 591 | 593 |
| 871 | 4361 | 4426 | 143 |
| 156 | 339 | 940 | 975 |
| 1096 | 1585 | 1931 | 4664 |
| 84 | 264 | 295 | 300 |
| 402 | 793 | 927 | 3051 |
| 4023 | 39 | 83 | 105 |
| 180 | 277 | 330 | 363 |
| 368 | 3431 | 179 | 223 |
| 261 | 288 | 454 | 526 |
| 1596 | 3628 | 4288 | 216 |
| 410 | 761 | 1138 | 1203 |
| 1636 | 2868 | 3834 | 3904 |
| 124 | 455 | 459 | 671 |
| 732 | 1316 | 3361 | 3741 |
| 4289 | 482 | 580 | 1201 |
| 1730 | 2200 | 2587 | 3031 |
| 3900 | 498 | 988 | 1302 |
| 1435 | 2355 | 3101 | 3409 |
| 4013. | | | |

### கரவெட்டி

யா / க / 87

| | | | |
|---|---|---|---|
| 88 | 97 | 315 | 327 |
| 1685 | 2412 | 2516 | 3084 |
| 3130 | 38 | 55 | 282 |
| 771 | 896 | 1012 | 1342 |
| 3191 | 3244 | 3526 | 216 |
| 244 | 289 | 903 | 1027 |
| 2303 | 2385 | 3414 | 4185 |
| 4764 | 202 | 389 | 507 |
| 586 | 1627 | 1920 | 2049 |
| 3168 | 3428 | 3912 | 147 |
| 321 | 335 | 936 | 1295 |
| 1663 | 1745 | 2379 | 3646 |
| 4828 | 10 | 175 | 347 |
| 608 | 791 | 1109 | 1464 |
| 1470 | 2452 | 3181 | 69 |
| 183 | 416 | 804 | 958 |
| 1575 | 2464 | 3531 | 3704 |
| 4637 | 161 | 234 | 418 |
| 728 | 815 | 1002 | 1360 |
| 1836 | 3049 | 3616 | 148 |
| 453 | 573 | 765 | 902 |
| 2246 | 3803 | 3817 | 4347 |
| 4353 | 94 | 309 | 521 |
| 803 | 994 | 1024 | 1129 |
| 2111 | 3810 | 4307 | 606 |
| 685 | 826 | 937 | 1085 |
| 2672 | 3341 | 4280 | 4543 |
| 4613 | 11 | 441 | 466 |
| 934 | 1203 | 2149 | 2944 |
| 3409 | 4394 | 4656 | |

### கோப்பாய்

யா / கோ / 251

| | | | |
|---|---|---|---|
| 1261 | 1673 | 1726 | 1772 |
| 2128 | 2852 | 3900 | 38 |
| 529 | 531 | 810 | 854 |
| 1283 | 4253 | 4915 | 108 |
| 453 | 1721 | 2624 | 2712 |
| 3021 | 4877 | 5303 | 57 |
| 326 | 920 | 1179 | 1561 |
| 2207 | 2954 | 4759 | 33 |
| 252 | 314 | 422 | 1426 |
| 1451 | 4900 | 5160 | 117 |
| 388 | 951 | 1800 | 3473 |
| 3919 | 5217 | 5263 | 354 |
| 363 | 1846 | 2529 | 3388 |
| 4539 | 5338 | 6230 | 303 |
| 385 | 1568 | 1783 | 2540 |
| 3184 | 3638 | 4172 | 243 |
| 345 | 743 | 964 | 1972 |
| 4880 | 6216 | 6261 | 25 |
| 66 | 836 | 1960 | 2964 |
| 3206 | 3241 | 3611 | 4510 |
| 212 | 446 | 451 | 1055 |
| 2385 | 3622 | 6341 | 6428 |
| 139 | 213 | 506 | 3173 |
| 4471 | 5657 | 6153 | 6376 |

### தெல்லிப்பளை

யா / தெ / 68

| | | | |
|---|---|---|---|
| 141 | 387 | 1325 | 1487 |
| 1790 | 3015 | 3185 | 81 |
| 276 | 649 | 1216 | 2267 |
| 2815 | 3671 | 3854 | 317 |
| 431 | 436 | 1445 | 2075 |
| 2736 | 3014 | 4110 | 41 |
| 94 | 221 | 354 | 407 |
| 900 | 1460 | 2211 | 05 |
| 12 | 264 | 1451 | 1889 |
| 2090 | 2547 | 3894 | 329 |
| 1438 | 1503 | 2348 | 2518 |
| 2778 | 3424 | 4022 | 23 |
| 538 | 573 | 714 | 2025 |
| 2309 | 3264 | 3362 | 11 |
| 355 | 493 | 503 | 795 |
| 942 | 1273 | 2870 | 148 |
| 362 | 524 | 647 | 871 |
| 2340 | 2551 | 2762 | 137 |
| 293 | 417 | 934 | 3217 |
| 3260 | 3610 | 4364 | 10 |
| 83 | 385 | 477 | 564 |
| 1089 | 2406 | 4066 | 129 |
| 157 | 775 | 933 | 1424 |
| 2332 | 2627 | 3715. | |

### வேலணை

யா / வே / 577

| | | | |
|---|---|---|---|
| 640 | 1210 | 1355 | 1418 |
| 25 | 323 | 521 | 931 |
| 958 | 15 | 65 | 420 |
| 824 | 2802 | 268 | 382 |
| 1213 | 1449 | 1481 | 2345 |
| 07 | 328 | 701 | 1347 |
| 2421 | 2626 | 241 | 592 |
| 641 | 688 | 1863 | 2403 |
| 50 | 378 | 633 | 754 |
| 780 | 2471 | 212 | 774 |
| 1100 | 1275 | 2084 | 2667 |
| 06 | 351 | 359 | 1401 |
| 1521 | 2495 | 112 | 162 |
| 219 | 250 | 430 | 805 |
| 19 | 210 | 368 | 386 |
| 582 | 2266 | 122 | 190 |
| 232 | 526 | 1103 | 1417 |

### காரைநகர்

யா / கா / 214

| | | | |
|---|---|---|---|
| 871 | 01 | 682 | 91 |
| 370 | 347 | 854 | 174 |
| 969 | 154 | 802 | 279 |
| 484 | 307 | 869 | 26 |
| 158 | 401 | 904 | 253 |
| 656 | 45 | 312 | |

### பருத்தித்துறை

யா / பரு / 957

| | | | |
|---|---|---|---|
| 1403 | 2163 | 2165 | 2460 |
| 2826 | 4252 | 4344 | 142 |
| 150 | 917 | 937 | 2829 |
| 3115 | 3452 | 3453 | 571 |
| 673 | 791 | 1026 | 2148 |
| 3146 | 3253 | 3726 | 259 |
| 1236 | 1561 | 2050 | 2675 |
| 3073 | 3138 | 3878 | 04 |
| 36 | 678 | 738 | 837 |
| 930 | 1820 | 2594 | 87 |
| 304 | 643 | 961 | 1312 |
| 2340 | 2602 | 4241 | 412 |
| 550 | 665 | 763 | 790 |
| 874 | 877 | 1327 | 172 |
| 239 | 1903 | 2010 | 2461 |
| 2873 | 2904 | 4286 | 278 |
| 451 | 458 | 546 | 864 |
| 2934 | 3161 | 3436 | 110 |
| 320 | 801 | 909 | 3463 |
| 2603 | 4142 | 4283 | 11 |
| 26 | 42 | [illegible] | 280 |
| 2530 | 2637 | 4021 | 16 |
| 153 | 260 | [illegible] | [illegible] |
| 2614 | 3356 | 3922 | |

### உடுவில்

யா / உ / 55

| | | | |
|---|---|---|---|
| 958 | 1526 | 2122 | 3010 |
| 98 | 242 | 765 | 1883 |
| 2730 | 771 | 1456 | 1778 |
| 2012 | 2813 | 86 | 154 |
| 381 | 842 | 2581 | 371 |
| 518 | 844 | 957 | 1862 |
| 49 | 99 | 144 | 156 |
| 661 | 174 | 689 | 971 |
| 1381 | 2621 | 295 | 819 |
| 1153 | 1354 | 2620 | 12 |
| 243 | 981 | 2132 | 3142 |
| 356 | 684 | 1029 | 1482 |
| 2673 | 112 | 311 | 2038 |
| 2094 | 3118 | 190 | 315 |
| 882 | 1467 | 2840 | |

### மானிப்பாய்

யா / மா / 05

| | | | |
|---|---|---|---|
| 1013 | 1136 | 1931 | 2011 |
| 3405 | 56 | 112 | 230 |
| 537 | 3123 | 3231 | 186 |
| 541 | 549 | 1401 | 2393 |
| 2873 | 63 | 259 | 989 |
| 1036 | 3131 | 3834 | 47 |
| 163 | 672 | 1456 | 2864 |
| 3396 | 443 | 734 | 2275 |
| 3450 | 3625 | 3712 | 127 |
| 553 | 1600 | 1988 | 2828 |
| 3157 | 209 | 796 | 2005 |
| 2629 | 3372 | 3597 | 382 |
| 632 | 1124 | 2093 | 2966 |
| 3175 | 280 | 283 | 654 |
| 2485 | 2980 | 3632 | 573 |
| 628 | 1032 | 1119 | 1983 |
| 3068 | 3469 | 200 | 375 |
| 405 | 677 | 764 | 2046 |
| 3098 | | | |

### யாழ்ப்பாணம்

யா / யா / 16

| | | | |
|---|---|---|---|
| 281 | 548 | 843 | 1420 |
| 1921 | 3588 | 4439 | 4744 |
| 4821 | 230 | 583 | 615 |
| 1423 | 1440 | 2064 | 2345 |
| 3208 | 3283 | 3451 | 232 |
| 364 | 149 | 1410 | 1952 |
| 2343 | 3537 | 4491 | 4550 |
| 5013 | 36 | 69 | 496 |
| 503 | 728 | 861 | 1609 |
| 2934 | 869 | 31 | 434 |
| 441 | 471 | 911 | 930 |
| 3298 | 3463 | 3978 | 42 |
| 265 | 361 | 511 | 642 |
| 847 | 983 | 1225 | 4359 |
| 227 | 443 | 1542 | 1866 |
| 2040 | 2372 | 4130 | 4289 |
| 4528 | 637 | 1072 | 1276 |
| 2020 | 2392 | 3260 | 3535 |
| 3892 | 4403 | 112 | 789 |
| 883 | 1493 | 1724 | 2425 |
| 2758 | 3754 | 3877 | 509 |
| 2039 | 2512 | 2833 | 3720 |
| 4321 | 4380 | 4639 | 4944 |
| 11 | 14 | 275 | 374 |
| 3647 | 4200 | 4231 | 4471 |
| 4852 | 168 | 205 | 520 |
| 526 | 533 | 629 | 1436 |
| 2630 | 5033. | | |

### நல்லூர்

யா / ந / 306

| | | | |
|---|---|---|---|
| 312 | 482 | 732 | 1186 |
| 1480 | 1839 | 2672 | 3472 |
| 4096 | 111 | 280 | 1176 |
| 1831 | 2606 | 3287 | 5126 |
| 5186 | 5312 | 5326 | 42 |
| 163 | 435 | 442 | 670 |
| 961 | 1830 | 3125 | 4365 |
| 5527 | 841 | 905 | 1137 |
| 2137 | 3175 | 3214 | 4101 |
| 5255 | 5523 | 5647 | 173 |
| 915 | 987 | 1690 | 2469 |
| 2684 | 2765 | 4896 | 4915 |
| 5264 | 260 | 269 | 279 |
| 531 | 593 | 597 | 1514 |
| 1841 | 4115 | 4364 | 149 |
| 311 | 371 | 857 | 972 |
| 1508 | 1771 | 3153 | 3573 |
| 5094 | 469 | 614 | 761 |
| 804 | 1107 | 1124 | 1133 |
| 1554 | 3862 | 4621 | 1348 |
| 2127 | 2346 | 3571 | 3608 |
| 3871 | 4253 | 5271 | 5428 |
| 5659 | 120 | 423 | 751 |
| 1227 | 1283 | 1298 | 2656 |
| 3480 | 3490 | 5103 | 58 |
| 235 | 543 | 1800 | 1832 |
| 2101 | 3845 | 3892 | 5322 |
| 5388 | 27 | 256 | 263 |
| 273 | 1231 | 1632 | 2594 |
| 3119 | 3324 | 4682 | |

### வெளியகல்வு

யா / வெ / 69

| | | | |
|---|---|---|---|
| 1341 | 1359 | 182 | 862 |
| 1054 | 196 | 414 | 522 |
| 126 | 219 | 346 | 420 |
| 840 | 942 | 145 | 542 |
| 1127 | 23 | 631 | 759 |
| 416 | 581 | 1079 | 143 |
| 152 | 230 | 1059 | 1607 |
| 1642 | 601 | 1176 | 1441 |
| 617 | 1352 | 1498 | |

## சூரன்போர்

கந்தசஷ்டி விழா இன்று வெள்ளிக்கிழமை பூர்த்தி அடைகின்றது. இன்று மாலை குடாநாட்டில் உள்ள பெரும்பாலான முருகன் ஆலயங்களில் சூரன் போர் இடம்பெறும். நாளை [illegible] யாண விழா நடைபெறும்.

(அ-3-5)

# தமிழர் உயர்கல்வி வளர்ச்சிக்கு உழைத்த சேர். பொன். இராமநாதன்

தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பெரிதும் உழைத்த சேர். பொன் இராமநாதனின் நினைவு தினம் இன்றாகும்.

அவர் வடக்கில் நிறுவிய இரு கல்லூரிகள் இன்று தமிழ்மாணவர்களின் உயர் கல்வி நிலையங்களாக விளங்குகின்றன. அவற்றில் ஒன்றான பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மிளிர்கின்றது.

யாழ். பல்கலைக்கழகம் வளாகமாகக் கருக்கொண்ட போது, அது உற்சவ பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்ட வேளை (06 - 10 - 1974 இல்) அப்போதைய கல்வி அமைச்சரும் பல்கலைக்கழகப் பிரதி வேந்தருமான கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் விடுத்த செய்தியில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் குறித்தும், பல்கலைக்கழக வளாகம் உருவாகியது குறித்தும் தெரிவித்தகருத்துக்களை இங்கே தொகுத்துத் தருகிறோம்.

யாழ்ப்பாணத்திலே பல்கலைக்கழக வளாகம் நிறுவப்படுவது இந்த நாட்டுக் கல்வித்துறையிலே, சிறப்பாக யாழ். மாநிலக் கல்வித்துறையிலே புதியதோர் சகாப்தத்தின் ஆரம்பம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வர். இது வட மாநிலக் கல்வி வரலாற்றிலேயே மிகப்பெரிய திருப்பமாக அமையுமென்பது நிச்சயம்.

எதிர்காலத்தில் இந்நாட்டுக் கல்வி வரலாற்றை எழுதுவோர் அனைவரும் இந்த நிகழ்ச்சியை அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் குறிப்பிடுவரென்பதில் ஐயமில்லை. இத்தகைய மகத்தான கல்விப்பணி ஒன்றை நான் கல்வி அமைச்சராக இருக்கும் காலத்திலே என் கையினாலே செய்து வைத்துள்ளேன் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இத்தொடர்பிலே முன்னாள் மேற்சபை உறுப்பினரும் பரமேஸ்வரக் கல்லூரி அதிபருமாயிருந்த காலஞ்சென்ற கலாநிதி சு. நடேசன் அவர்களைப் பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும். சென்ற முறை நான் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் மேற்சபை உறுப்பினராயிருந்த கலாநிதி சு. நடேசன் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு ஒரு பல்கலைக்கழகம் அவசியம் தேவை என்பதைப் பற்றி என்னிடம் பலமுறை குறிப்பிட்டு வந்தார்.

ஆயினும் அப்போது அவர் கருதியதும் கோரியதும் பெரும்பாலும் ஒரு கலாசாரப் பல்கலைக்கழகமேயாகும். எனினும் நான் யாழ்ப்பாண மக்களின் உயர்கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அங்கு பல துறைகளையும் கொண்ட பூரணமான பல்கலைக்கழக வளாகமொன்றை நிறுவ வேண்டுமெனத் தீர்மானித்தேன். எனது தீர்மானத்தைப் பிரதமரும் ஏற்றுப் பூரண ஆதரவு தந்தார்.

இச்சந்தர்ப்பத்திலே இவ்வளாகத்துக்கு மூல நிலையமாகவுள்ள பரமேஸ்வரக் கல்லூரியை நிறுவிய சிறந்த கல்விமானும் கொடைவள்ளலுமாகிய சேர். பொன் இராமநாதன் அவர்களை நினைவு கூருவதும் நமது கடமையாகும். அவர்கள் மகளிருக்காக நிறுவிய இராமநாதன் கல்லூரியிலே இவ்வாண்டின் முற் பகுதியிலே நுண்கலைக் கல்லூரியை நிறுவினோம்.

இப்போது அவர்கள் இளைஞருக்காகக் கட்டிய பரமேஸ்வரக் கல்லூரியிலே அந்த நுண்கலைக் கல்லூரியை விடப் பரந்ததும், அதனையும் தன் அங்கங்களுள் ஒன்றாகக் கொள்ளக் கூடியதுமாகிய இவ்வளாகத்தை நிறுவுகின்றோம். தாம் நிறுவிய இரு கலாசாலைகள் மூலம் உயர் கல்வித் துறையிலே இணையற்ற அரும்பணிக்கு அன்றே வித்திட்டு வைத்த சேர். பொன் இராமநாதன் அவர்களின் வள்ளன்மையினையும் தீர்க்க தரிசனத்தையும் மனமாரப் பாராட்டுகின்றேன்.

இவ்வளாகம் பல்கலைக்கழகத்துக்குப் பொதுவாக உரிய துறைகள் பலவற்றுக்கும் இடமளிக்குமெனினும், இப்பிரதேசத்துக்கே தனிச் சிறப்பாகவுள்ள தமிழ்மொழி, தமிழிசை, தமிழ்க் கலாசாரம் ஆகியவற்றை வளர்ப்பதற்கும், அவை பற்றி ஆழமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் தனியிடமளிக்குமென்பதிற் சந்தேகமில்லை. ★

## நவீல்ட் நத்தார் இசை ஆராதனை

யாழ்ப்பாணம், நவ. 19

நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் வருடாந்த நத்தார் இசை ஆராதனையும் கலை நிகழ்ச்சிகளும் நாளை சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடை பெறும்.

(இ)

ஆண்டு 6 ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கோட்டத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் அந்த கோட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்கே அனுமதி பெற முடியும் என்றும் —

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைபவர்களும், தேசிய, தனியார் பாடசாலைகளில் அனுமதிப் பரீட்சையில் தோற்றி சித்தி அடைந்தவர்களும் இந்த நடைமுறைக்குள் அடங்கமாட்டார்கள் என்றும்— அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-3)

மாவீரர் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர் நினைவாக, வட்ட ரீதியாக விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது. அந்தந்த வட்டங்களைச் சேர்ந்த மாவீரர்களின் திருவுருவப் படங்கள் அந்தப் பந்தல்களில் வைக்கப்படும். மக்கள் அவற்றுக்கு தீபாஞ்சலி, மலராஞ்சலி, கீதாஞ்சலி செய்வர்.

மாவீரர் வாரத்தில் தேசியக் கொடியேற்றல், மாவீரரின் பெற்றோரைக் கௌரவித்தல், சிரமதானங்களைச் செய்தல், நூல் வெளியீடுகள், வீர வணக்கக் கூட்டங்கள், மாவீரர் சுடரேற்றும் நிகழ்ச்சிகள் என்பன நடைபெறும்.

மாவீரர் வாரத்துக்கு முன்னோடியாக இப்போது மாவீரர் எழுச்சி வாரம் நடைபெறுகிறது.

தமிழீழத்தின் பெரும்பாலான இடங்கள் மக்களால் சிரமதானம் மூலம் சுத்தமாக்கப்பட்டுச் சுகாதாரம் பேணப்பட்டுள்ளது.

மாவீரர் தூபிகள் மற்றும் நிழல் படங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள், வீதிகள், ஒழுங்கைகள், கல்விக் கூடங்கள், பொது இடங்கள் அலுவலகங்கள் யாவும் சுத்தமாக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சிதருகின்றன.

வீடுகள் தோறும் மக்கள் தனித்தும் ஒருமித்தும் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது.

(அ-3-5)

## வட்ட ரீதியாக இன்று மாவீரர் வார கருத்தரங்குகள்

நாளை மறுதினம் ஆரம்பிக்கும் மாவீரர் வாரத்துக்கு முன்னோடியாக மாவீரர் எழுச்சி வாரக் கருத்தரங்குகள் வட்டரீதியாக நடைபெற்று வருகின்றன.

இன்றிரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகும் கருத்தரங்குகள் வட்ட ரீதியாக வருமாறு:-

★ யாழ்ப்பாணம் — கற்குளம் ச. ச. நிலையத்தில்

★ நல்லூர் — கொக்குவில் மேற்கு காந்தி ச. ச. நிலையத்தில்

★ கோப்பாய் வடக்கு — பொக்கணை ஊரெழு குடியேற்றத் திட்டத்தில்

★ உடுவில் — கந்தரோடை துர்க்கா ச. ச. நிலையத்தில்

★ சங்கானை —பனிப்புலம் அம்மன் கோயிலடியில்.

★ சண்டிலிப்பாய் — சண்டிலிப்பாய் வடக்கு நரேஷ் ச. ச. நிலையத்தில்.

★ உடுப்பிட்டி — அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில்.

★ பருத்தித்துறை — புலோலி தெற்கு மொறவில் பிள்ளையார் கோவிலடியில்.

★ கரவெட்டி — அல்வாய் கிழக்கு சாமணந்துறை பிள்ளையார் கோயிலடியில்.

★ கொடிகாமம் — கொடிகாமம் நாவலடி அ. த. க. பாடசாலையில்.

★ சாவகச்சேரி — சரசாலை சரஸ்வதி வித்தியாசாலையில்.

★ கைதடி — மறவன் புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில். (ஒ-3)

## தேர்தல் அறிவிப்பு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

அரசுக்கு ஆதரவான முஸ்லிம் கட்சியும் பிற கட்சிகளும் தாமும் தேர்தலை பகிஷ்கரிக்க போவதாக அறிவித்து உள்ளன.

சுதந்திரக் கட்சி கூட தேர்தலில் பங்கேற்பது சந்தேகமே.

தமிழ்க் கட்சிகள் தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துவிட்டன. இக்கட்சிகள் தமது ஆதரவாளர்களை பலிகொடுக்க விரும்பவில்லை.

நிலைமை இப்படி இருக்கும் போது, அரசு தேர்தல், தேர்தல் என்று ஏன் அறிவித்துக் கொண்டிருக்கிறது?

''அரசுக்கு வேறுவழியில்லை'' என்பதே அரசியல் நோக்கர்கள் தரும் விடையாகும்.

வடக்கு - கிழக்கில் அரசு மனித உரிமைகளை மீறி நடந்து வருகிறது என்ற தீர்மானம் ஒன்றை கடந்த ஆகஸ்டில் ஐ. நா. மனித உரிமை குழு நிறைவேற்றும் நிலைக்கு வந்து விட்டது.

கடைசி நிமிடத்தில் இலங்கை அரசு அத்தீர்மானத்தை நிறைவேற்றாது எப்படியோ பார்த்துக் கொண்டது.

அக்டோபரில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துகின்றோம் என்று சமாதானம் கூறி இலங்கை அரசு அத் தீர்மானத்தைக் கைவிடச் செய்வதில் வெற்றி கண்டது.

கடந்த ஆண்டு ஐ. நா. அமைப்பு ஒன்று இனப்போருக்கு ஒரு தீர்வு காண்டாக வேண்டும் என்று வலியுறுத்தியது.

எனவே இப் பின்னணியைப் பார்க்கும்போது, தேர்தல் அறிவிப்பு கண்டனங்களை திசை திருப்ப இலங்கை அரசு செய்யும் தந்திரம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

அப்படியே தேர்தல் நடந்தாலும், நடக்க வைக்கப்பட்டாலும் அது அமைதியாக நடக்கும் வாய்ப்பு மிகமிகக் குறைவு.

அண்மையில் பூநகரியில் விடுதலை புலிகள் இராணுவ முகாமை அழித்து பலரைச் சிறைபிடித்து ஆயிரத்துக்கு அதிகமான படையினரைக் கொன்று போட்ட நிலையில் அரசு மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை தகர்ந்து விட்டது.

இப்போது தேர்தல் நடத்தப்பட்டால் வேட்பாளர்களையும் வாக்காளர்களையும் பாதுகாக்க மாபெரும் எண்ணிக்கையில் படையினர் தேவைப்படுவார்கள்.

அரசு பேச்சுவார்த்தைக்கான கதவை மூடிவிட்டது என்று கூறி பெரும் அளவிலான போர் நடத்தப்படும் என்று சமீபத்தில் தான் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இப்போது தேர்தல் நடத்தப்படவுள்ள பகுதிகள் பெரும்பாலும் சிங்களப் பகுதிகள். இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்கள், ஆனால் மிகப்பரந்த நிலப்பரப்பு கெரில்லாக்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் சுதந்திரத் தேர்தல் என்பது எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது.

இப்படி பி. பி. ஸி. கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ—எ)

**காட்டு மரத்தை வெட்டாதே-எம்
நாட்டு வளத்தை அழிக்காதே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ் டிப்போ ஊழியர்களுக்கு அழைப்பு

வட பிராந்திய போக்குவரத்துச் சபை அனைத்து டிப்போக்களின் ஊழியர்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மற்றும் உத்தியோகத்தர்களை இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் டிப்போவில் சமுகம் தருமாறு பொது முகாமையாளர் கேட்டுள்ளார். (ஓ)

## திருத்தம்

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளிலுள்ள எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர் (தமிழ்/ஆங்கிலம்) பதவிகளுக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 150/- யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளெதிலும் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச் சீட்டு பெற்றுக் கொள்ளலாமென்பதை அறியத் தருகிறேன்.

யாழ்ப்பாண மாவட்ட,
அரசாங்க அதிபர்.

[சி-6376]

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் நல்லையா (சரவணை)

ஆறுமுகம் நல்லையா காலமானார்.

இவர் ஆறுமுகம் – நாகேஸ்வரியின் மூத்தபுதல்வரும், இரத்தின மலரின் (நல்லூர்) அன்புக் கணவரும் அனுஷ்யா, (மாணவி யாழ். வேம்படி), உமாசங்கர் (யாழ். மத்திய கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாச மிகு தந்தையும், கிருபாதேவி(நோர்வே), கனகரெட்னம் (ஓமான்), குணரெத்தினம் (சரவணை), தட்சணாமூர்த்தி (வவுனியா), காலஞ் சென்ற சகுந்தலாதேவி, அசோகமாலாதேவி (ஆசிரியை, சாவகச்சேரி வீரசிங்கம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் குமாரசாமி, பலச்சந்திரன் (அராலி), புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18–11 93 இல் நம்புக்கணையில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி
பிள்ளைகள்

38, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

### சுப்பையா சிவபாதசுந்தரம் (இராசா)

திருநெல்வேலி கிழக்கு, அரசடி ஒழுங்கையைச் சேர்ந்த சுப்பையா சிவபாதசுந்தரம் பாஹ்ரெனில் காலமானார்.

அன்னார் சுப்பையா – செல்வந்தி அம்மா தம்பதிகளின் அன்பு மகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், பிரதாபன் (கனகரட்ணம் ம.ம.வி.), மதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19-11-93) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. தனபாலசிங்கம்

"பத்மாஜினி அகம்"
அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு. (28093)

### திருமதி சந்திரராசா அமராவதி அம்மாள்

திருமதி சந்திரராசா அமராவதி அம்மாள் 18-11-93 இல் காலமானார்.

அன்னார் சந்திரராசாவின் (பென்சனர்) அன்பு மனைவியும் சிவதாசன் (ஹற்றன் நஷனல் வங்கி, கொழும்பு.), கமலினி (டுபாய்), ரஞ்சினி, குகதாசன், (டுபாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் செந்தில் அரசி, சிவநாதன் (டுபாய்), மகாலிங்கம் (அரசினர் வைத்தியசாலை, தொல்புரம்) சிவச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதாயினி, ஸ்ரீஹர்சினி, கஜனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-11-93 (வியாழக்கிழமை) வழுக்கையாறு இந்து மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க. சந்திரராசா
(கணவன்)

அற்கின்சன் வீதி,
வட்டுக்கோட்டை. (28104)

### கந்தசாமி ஐயர் இராசம்மா அம்மா

எழுதுமட்டுவாள் பெரியகேணிப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த இராசம்மா அம்மா காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற கந்தசாமி ஐயரின் அன்பு மனைவியும், பகவதி அம்மா, காலஞ்சென்ற நாகராசா ஐயர், நகுலாம்பிகா அம்மா, நாகேஸ்வரி அம்மா, நாகேஸ்வரக் குருக்கள், சாரதாம்பாள், சிவானந்தசர்மா ஆகியோரின் அன்புத் தாயாரும்—

காலஞ்சென்ற நடராசா ஐயர் மற்றும் சுவர்ணலட்சுமி, பரராஜசேகரக் குருக்கள், சத்தியோசாதசர்மா, பாலசுப்பிரமணிய சர்மா, சுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுபத்திராதேவி, ஸ்ரீதரன், இந்துமதி, சுவேந்திரசர்மா, சுதாகர சர்மா, குகனேச சர்மா, சுசீகலாதேவி, சத்தியபாமா, தர்சினி, பகிரதன், சத்தியசீலன், ரஜனிபாலா, கஜேந்திரன், கஜேந்தினி, கயிலைநாதன், ஜெகதீபன், ஜெனனி, கணநாதன், கௌசிகா, யாழினி —

செந்தூரன், துஷி, கணேசசர்மா, புவனேந்திரசர்மா, புவனேஸ்வரி, தெய்வேந்திரசர்மா ராகுலன் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் (19-11-93) இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இராமியன் மயானத்தில் தகனம்செய்யப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாகேஸ்வரக் குருக்கள்
(மகன்)

எழுதுமட்டுவாள் தெற்கு,
எழுதுமட்டுவாள். (28 105)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19 - 11 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### பூநகரி குறித்து பேசமாட்டார்

பூநகரிப் பாதையைத் திறப்பது குறித்து யாழ். அரச அதிபர் கொழும்பில் அதிகாரிகளுடன் பேசமாட்டார்.

இந்தத் தகவலை அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் நேற்றுத் தெரிவித்தார்.

அடுத்த வாரமளவில் கொழும்பு செல்லும் அரச அதிபர், தாம் அங்குள்ள அதிகாரிகளுடன் பூநகரியைப் போக்குவரத்துக்குத் திறப்பது குறித்துப் பேசவிருப்பதாகத் தெரிவித்ததாக உதயனில் நேற்று முன் தினம் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே. (அ-3)

### இன்று

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நடத்தும் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் ஞாபகார்த்தக் கூட்டம் இன்று மாலை நடைபெறுகிறது. கந்தர்மடம் ஆத்திசூடி வீதி சித்திவிநாயகர் ஆலயத்தில் இடம்பெறும் பிரஸ்தாப விழாவில் பொற்கிழிப்பதிக நூல் வெளியீடும் நிகழும். (அ)

★ ★ ★

வழக்கம்பரை பஜனைச் சபையினரின் அபிராமி அந்தாதி (42 ஆவது செய்யுள்) ஆய்வுரை நூல் இன்று மாலை வெளியிட்டு வைக்கப்படும். வழக்கம்பரை அம்மன் கோயிலில் இவ்விழா நடைபெறும்.

## மல்லிகை

மல்லிகை என்ற எனது வர்த்தக நிறுவனத்துடனும், என்னுடனும் தொடர்புகொள்ள விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**திரு. K. ராஜன்**

14, குமாரசாமி வீதி, யாழ்ப்பாணம்.

(6812)

## காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபை

நீர்வேலி

20 – 11 – 93 இல் நடைபெறவிருந்த மேற்படி சபையினரின் சமய பாடப் பரீட்சை தற்போதய கால நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

—பரீட்சைக்குழு

(28099)

## கண்ணீர் அஞ்சலி


### குழந்தைவேலு சத்தியேந்திரா
(2ஆம் லெப்டினன்ட் சிவகுமாரன்)

பூநகரி முகாம் தகர்ப்பில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட எங்கள் ஆசானின் மைந்தனுக்கு புதிய உயர் கலைக் கல்லூரி இரண்டாம் வருட யாழ். பல்கலைக் கழக வெளிவாரி கலைப்பிரிவு மாணவர்களாகிய நாம் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

2 ஆம் வருட கலைப்பிரிவு
வெளிவாரி மாணவர்கள்,
புதிய உயர் கல்லூரி.

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (28103)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி நல்லையா
(195, சிவன்பண்ணை வீதி)

தோற்றம்: **05 — 10 — 1912**
மறைவு: **15 — 11 — 1988**
திதி: 19 — 11 — 1993

ஆண்டு ஐந்து ஓடி மறைந்தாலும், உங்கள் நினைவு என்றும் எங்கள் இதயங்களில் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

609, நாவலர் றோட்,
நல்லூர். (28[illegible])

### விவசாய பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ. 19

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விவசாயிகளுக்காக நடத்தப்பட்டு வரும் விவசாயப் பயிற்சி வகுப்புக்களின் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ள இடங்களின் விவரம் வருமாறு:-

★ கீரிமலை பகுதி விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு இன்று வெள்ளி முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் ப.நோ.கூ. சங்க மண்டபத்திலும் —

★ கரவெட்டி பகுதி விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு இன்று பிற்பகல் 3 மணிக்கு நவிண்டில் நாவலர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் —

★ உரும்பராய் பகுதி விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு இன்று முற்பகல் 10 மணிக்கு உரும்பராய் செல்லப்பா ச. ச. நிலையத்திலும் நடைபெறும். (ஒ-5)

### விளையாட்டு நிகழ்வு

யாழ். கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறும் 17 வயதுப் பிரிவு ஆட்டம் ஒன்றில் ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து சென். ஜோசப் ம. வி. மோதும். (உ)

★ ★ ★

யாழ். ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும்.

இப் போட்டியில் யாழ். ஜொனியன்ஸ்சிவப்பு அணியை எதிர்த்து பற்றீஷியன் கோல்ட் அணி மோதும். (இ-3)

### கிழக்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ இணைப்பதிகாரி உட்படப் பலர் தெரிவித்ததை அடுத்து கூட்டுறவு சபைகளுக்கான தேர்தலை தான் ஒத்திப் போட்டுள்ளதாக வழக்கைத் தாக்கல் செய்துள்ள ஆணையாளர் கூறிஉள்ளார் என்றும் திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (இ-5)

### வடக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சினையைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. அதனைத் தீர்க்கும் விதத்தில் செயற்படுவதற்கு அரசு முயலவில்லை. யுத்தத்தை நீடிப்பதே அரசாங்கத்தின் நோக்கம்—

வடக்கு–கிழக்கு யுத்தநிலை நீடிப்பதால் எல்லா வகைகளாலும் இந்த நாட்டு மக்களுக்கே நட்டமும் அழிவு மாகும்—

யுத்தத்தின் காரணமாக அங்கு வாழும் விவசாயிகள் சொல்லொணா கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். உரம், எரிபொருள் போக்குவரத்து வசதிகள் எதுவும் கிட்டாத நிலையை அவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது— என்றும் திருமதி பண்டாரநாயக்கா கூறினார்.

நாடாளுமன்ற விவகார, சூழல், திட்டமிடல் அமைச்சர் டாக்டர் விமல் விக்கிரமசிங்கா பேசுகையில் கூறியதாவது:-

வடக்கு – கிழக்கில் பெரிய யுத்தம் நடந்து கொண்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். உலக நாடுகளுக்கும் தெரியும். எனினும் அவை அதனைப் பொருட்படுத்தவில்லை. அதனாலேயே பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டவர்கள் இலங்கையில் மூலதனமிடுகிறார்கள்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன எமது பொருளாதாரக் கொள்கைகளிலும், செயற்பாடுகளிலும் திருப்தி அடைந்துள்ளார்கள். அதனாலேயே எமக்கு வேண்டியளவு கடனுதவிகளைத் தந்துதவுகிறார்கள்— என்றார். (அ-5)

## சூர சங்கார விழா

பொலிகண்டி

**கந்தவனக் கடவை**
**ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி**
**தேவஸ்தானம்**

இன்று (19—11—93)
இரவு 8.00 மணிக்கு சூரசங்காரம்

இரவு 10.00 மணிக்கு
**"சூரனை வதம் செய்த வேலன்"**
என்னும் பொருளில்

'அருள்மொழிச் செல்வர்' 'பைந்தமிழ் பாவலன்'
'செந்தமிழ்ச் செம்மல்' 'சொற் பேராழி'

வாகீச கலாநிதி
கனகசபாபதி நாகேஸ்வரன், எம்.ஏ
அவர்களின்

**தெய்வீக இசைப் பேருரை**
நிகழும்.

— விழா உபயகாரர் —

(சி/6379)

## யா/இராமநாதன் கல்லூரி நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும்

| | |
|---|---|
| காலம் | : சனிக்கிழமை 20—11—93 பிற்பகல் 2.00 மணி |
| இடம் | : கல்லூரி மண்டபம் |
| தலைவர் | : திருமதி ஆ. சிவஞானசுந்தரம் (அதிபர்) |
| பிரதம விருந்தினர் | : திரு. கா. மாணிக்கவாசகர் (அரசாங்க அதிபர்) |
| நிறுவுநர் நினைவு நாட்பேருரை | : திரு. R. S. நடராசா (அதிபர், ஆசிரியர், பயிற்சிக் கலாசாலை, பலாலி) |

சிறப்பு விருந்தினர்கள்

திரு வே. பாலகுமாரன் (பொறுப்பாளர், தமிழீழக் கல்விக் கழகம்)

திரு. சு. இரட்ணராஜா (பிரதிக் கல்விப் பணிப்பாளர், உடுவில் பிரதேசக் கல்வி அலுவலகம்)

திரு. இ. சிவானந்தன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோப்பாய் பிரதேசக் கல்வி அலுவலகம்)

சிவத்தமிழ் செல்வி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.

பரிசில் வழங்குதல்

திருமதி யோகேஸ்வரி மாணிக்கவாசகர்

அன்று காலை 7.00 மணிக்கு இராமநாதேஸ்வர ஆலயத்தில் அபிடேக ஆராதனை நடைபெறும். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பழைய மாணவர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம் – சபை

(சி/2046)

அதிஷ்ட தேவதை உங்களை
அழைக்கிறது!

## நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்க

வளர்ச்சி நிதிக்காக

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டு

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | ரூபா | 25,000.00 |
| இரண்டாம் பரிசு | ரூபா | 15,000.00 |
| மூன்றாம் பரிசு | ரூபா | 10,000.00 |

ஆறுதல் பரிசுகள் தலா ரூபா **1.000.00** கொண்ட 10 பரிசுகள்.

இடம்: இளங்கலைஞர் மன்றம், நல்லூர்
காலம் **25 - 12 - 1993** சனிக்கிழமை
நேரம்: மாலை **5-00** மணி

**அன்பளிப்பு: ரூபா 10-00**

நல்லூர் பிரதேச வர்த்தக நிலையங்களில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. ஏமாற்றத்தை தவிர்க்க ரிக்கெட்டுக்களை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளுங்கள்.

தங்கள் ஆதரவிற்கு நன்றி

செயலாளர் தலைவர்

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்
968, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

(சி-6377)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org